ஸ்ரீ திரிபுரிசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

மாதாபிதாக்களின் சிறியதோர் சரீரபாகத்தின் பரிணாமமாகிய புத்திரனுடையசரீரம் வேறுபட்டுக்காணப்பட்டாலும் இரண்டுமொன்றென்றே சாஸ்திரங்களின் கூற்று. கைகால் முதலிய அங்காவயவங்கள் வெவ்வேறுபட்டதாகக் காணப்படினும் ஒரே சரீரத்தில் அமைந்துள்ளனவாதல் பற்றி ஒரே பூர்ணாபிமானத்திற்குப் பாத்திரமாகி பேதமற்றதாகவே பாவிக்கப்படுகின்றதல்லவா! அதனால் ஒன்றற்கொன்று உதவிபுரிந்து கொண்டு சுகமாகவாழ்கின்றதும் பிரத்தியக்ஷமன்றோ. அதுபோல் பிதா புத்திரர்களும் ஒருமையுடையவர்களாதல்பற்றி ஒருவர்க்கொருவர் பூர்ணாபிமானம் பாராட்டி இம்மையிலும் மறுமையிலும் வைதிகமார்க்கமாய் உபகாரம் செய்துகொண்டு சுகமாக வாழ்ந்துகொண்டு வந்திருக்கிறார்கள். அத்தகைய உத்தம புத்திர இரத்தினம் கிடைப்பதற்கு ஒரே ஜாதியிற்பிறந்து அனுகூலமான குணங்களமையப்பெற்ற ஸ்திரீபுருஷர்கள் சாஸ்திரீயமுறையில் தம்பதிகளாகச் சேர்ந்து பாடுபட்டு வந்தார்கள். அதனால் தாய் தந்தையர்களுக்கு புத்திரவாத்ஸல்யமும், புத்திரனுக்கு மாதாபிதாக்களைத் தெய்வமாய் நினைக்கும் பக்தியும் நிறைந்திருந்தது. இதற்கெல்லாம் காரணம் இஹத்திலும் பரத்திலும் பரஸ்பரம் உபகாரம் செய்துகொண்டு வந்ததுதானென்பது வெளிப்படை. தற்காலத்தில் அத்தகைய உபகாரம் செய்துகொள்ள நேராமையால் சிலவிடத்தில் பிதா புத்திரர்களின் தன்மை ஒழுங்காகக்காணப்படவில்லை. பிதா புத்திரனை துவேஷிக்கிறான், புத்திரன் பிதாவைக் கொல்ல நினைக்கிறான். இரண்டு பேர்களும் கண்டகாலிகளைச் சேர்த்துக்கொண்டுக் கிஞ்சிற்றேனும் கௌரவ புத்தியில்லாமல் கலகமிட்டுக்கொண்டு கோர்ட்டு வாசலில் வியாஜ்யம் செய்யவந்தலைகிறார்கள். அதனாற்றான் விவாஹமுறையும் சாஸ்திரீயவழியிலேற்படவேண்டிய அவசியமில்லையென்று சிலர் நினைக்கிறார் போலும். சில விடங்களில் முறைதவறிவிட்டதாகக் காணப்பட்ட போதிலும் பலவிடங்களில் பிராசீன மார்க்கத்தைப் பாழாக்கிவிடப் பெரும்பாலும் பிராணிகள் பிரியப்பட்டதாகக் காணப்படவில்லை. ஆகவே சாஸ்த்ரீயவழியைச் சிதறவிடுவது தகாதகார்யம் ஒருவர் கெட்டவழியிற் புகுந்தாரென்பதற்காக நல்லவழியில் முள்ளிட்டடைப்பது நன்றா? காலிலிடறிக்காயம்பட்டுவிட்டால் கழுத்தைவெட்டிவிடுவது நியாயமா? வைதிகவழியிலீடுபட்டு வர்ணாச்சிரம தர்மத்தைக் காப்பாற்றக் கங்கணம் கட்டிக் கார்யத்தை நடத்த முன்வருபவர்கள் தொண்டுதொட்டுக் கொண்டாடப்பட்டு வந்ததைக்கண்டவர் அமிழ்த்திடப் பார்த்திருப்பார்களா? தனது ஆக்ஞையை மீறிநடக்க அசட்டுத்துணிச்சலடைந்த அற்ப சக்தியுள்ள அறிவீனர்களை ஸர்வசக்தி நிறைந்த ஸர்வக்ஞனான ஸர்வேசுவரன் அடக்கமுடியாதவரா? அவரது சக்தியாலல்லவா உலகம் நிலைத்திருக்கின்றது. ஆகையால் அவரது ஆக்ஞையைமீறி நடக்கமனங்கொள்ளாமல் யாவரும் வைதிகவழியேநாடி நடந்து இஹத்திலும் பரத்திலும் நன்மை அடைவார்களாக.

சுபம், பத்திராதிபர்.

# வைதிகவழியே நல்வழி

ஸர்வஜனங்களும் சிரேயஸ்ஸையடைய தற்காலத்தில் அனேகர் அனேகவழியைக் கற்பிக்கின்றனர். முன்னாளில் அப்படியில்லை. வைதிகவழியொன்றே நல்வழியாகக் கருதப்பட்டுவந்தது. அதை அனுஸரித்து வந்ததில் ஒருபிராணிகளுக்காவது உபத்திரவம் யாதும் நேரவில்லையென்பதுமாத்திரமல்ல, பலமுறையிலும் பெரியசுகமேகிடைத்தது. இதுமுன்னோர்களது சரித்திர ஆராய்ச்சியிலிருந்து தெரியவருகிறது. தற்காலத்தில் சிலமேதாவிகள் கூடி அதுநல்வழியில்லையென்று போதித்து வருகிறார்கள். அதனால் பிராணிகள் பலவிதத்திலும் கஷ்டப்படுவதாகக் காணப்படுகிறதேயன்றி சுகப்படுவதாகக் காணப்படவில்லை. கஷ்டப் படுவதையே சுகப்படுவதாக அவர்கள் நினைக்கிறார்கள் போலும் இப்படிநினைப்பது பிராந்தி கொண்டவனுக்கல்லவா ஏற்படும். ஆகவே அது சரியான நினைப்பாகாது. வீண் பிடிவாதத்தால் சிலர் அந்தப்புதியவழியைவிட்டு விலகப் பிரியப்படாவிடினும் பகுத்தறிவுடையோர்ப் பிராசீன வழியையவிட்டுப் புதியவழியில் புகுவது தகுதியல்ல. வைதிகவழியில் ஸர்வப்பிராணிகளும் அவரவர் அதிகாரத்திற்கேற்றவாறு ஸாதனங்களை யனுஷ்டித்து க்ஷேமத்தையடைய உபாயங் கூறப்படுகின்றது. சரீரங்களின் அமைப்பைக் கவனித்தால் அதிகாரபேத மேற்பட்டது உசிதமென்றே புலப்படும். பிறந்தது முதற்கொண்டே சிலர் பரவைராக்கியம் பொருந்தியவர்களாயிருக்கிறார்கள். சிலர் வைராக்கிய லேசமுமில்லாமல் காமத்தில் கட்டுண்டு கிலேசப்படுகிறார்கள். இவ்விரண்டு பேர்களுக்கும் ஒரேஸாதனமேற் பட்டால் போதாதென்பது புலப்படாமற் போகாது. சேற்றிலழுந்திக் கிடப்பவனுக்கும், மேட்டிலுள்ள நல்லரோட்டிலுள்ளவனுக்கும் ஒரே

கருவிஸாதநமாகாதன்றோ. ஆகையாலவனவனுக்குரித்தான கருவி களையடைந்து அவனவன் நன்மையை யடைவதுபோல் நம் வைதிகமுறையில் அவனவனுக்காக விதிக்கப்பட்ட கர்மம், உபாஸனம், ஞானம், இவைகளை யாசிரயித்து அததன் பலனைப் பெற்று நம்முன்னோர்கள் சிரேயஸ்ஸை யடைந்ததுபோல் தற்காலத்தியவர்களும் அவ்வழியையேநாடி நன்மையை யடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

---

# மதமும், மதஸ்தர்களும்.

(330-வது பக்கத்தொடர்ச்சி)

அதன்படி க்ஷேத்ரக்ஷேத்ரக்ஞ விபாகாத்யாயத்தில்விசாரம்நடக்கையில் क्षेत्रज्ञं चापि मां विद्धि என்ற விடத்தில் क्षेत्रज्ञ என்றபதத்திற்கு நம்முடையவர்கள் ஜீவன் என்றும் மடாதிபதிகள் க்ஷேத்ரக்ஞ என்றபதத்திற்கு ஸர்வக்ஞன் என்றும்கூறி அவ்விதம் கூற ப்ரமாணம் எங்கே, உங்களுக்கே முன்பின் முரண்படுமென்று காட்டியவுடன் ஸ்வாமிகள் சமயநிபந்தனையைத் தவறி வேறு வழியிற் போக ஆரம்பிக்கும்போது நம் அத்வைதிகள் இது நியாயமில்லை சமயநிபந்தனையை மீறிச்செல்லக்கூடாதென்று தடைசெய்ததைக் கண்டு பக்கத்திலிருந்த ஸ்வாமிகளின் சிஷ்யர்கள் பெரிய பீடாதிபதிகளை இவ்விதம் பேசக்கூடாதெனக் கூக்குரல் செய்தனராம். அதற்கு வாதமென்பதை ஸம்மதித்து வாதிபிரதிவாதிகளாய் நிற்பவர்களுள் இருவரும் ஸமம்தானென்று நம்மவர்கள் கூறப்பிறகு அவர்கள் மிகச் சீற ஆரம்பிக்கவே வரம்பு மீறின இவ்விடத்தில் நாங்கள் பேசத்தயாரில்லை என்று நம்மவர் வெளியேகினராம். இதுதான் நடந்த விஷயமென்று நம்மவர்களான பிர்மஸ்ரீ யக்ஞஸ்வாமிசாஸ்திரிகளவர்கள் மதுரை மகாஸபையில்வெளியிட்டனர். விஷயம் இவவிதம் நடந்திருக்க ஹிந்துபத்ரிகையில் வெளிவந்தது இதற்கு மாறாக. நம்மவர் சரியாய் பதிற்கூறமுடியாமல் கோபத்துடன் வெளியேகினரென்று பிரசுரித்திருந்தது. இவ்விதமந்த ஸ்வாமிகள் எவ்விதமோ ஹிந்துபத்ரிகையைத் தன்வசமாக்கிக் கொண்டது ஆச்சரியப்படத்தக்கதல்ல. விசிஷ்டாத்வைத பண்

டிதரும் கும்பகோணத்திலிருப்பவர்களுமான பண்டித R. V. கிருஷ்ணமாசார்யாரவர்களையும் வசப்படுத்தி அவர்கள்முகமாயும் நமக்கு பதிற்கூறும்படி செய்தது ஆச்சரியம். இனி இதற்கு மேல் யாம் கூறவேண்டுவது யாதுமாது. இவ்வித விஷயங்களில் ஸ்வாமிகளின் ஸாமர்த்யம் அபாரம்தானென்றுதான் கூறமுடியும். இன்னொன்று இங்கு கவனிக்கவேண்டும். 11—4—31ல் வெளிவந்த ஹிந்துப்பத்திரிகையில் ஓர் பெரிய வியாஸம் இதை பற்றி வெளிவந்திருந்தது. அதில் இவ்விதம் அத்வைதம் அவை திகமென்று கூறியதைப்பற்றி அவர்கள் மிக வருந்துகின்றனரே என்று நாகராஜசர்மா கேட்டதாயும் அதற்கு ஸ்வாமிகள் நாம் அவர்களின் சந்தோஷத்தையோ துக்கத்தையோ மட்டிலும் ஏற்கத்தக்கதாயில்லை. மற்று நான் கூறுவது மனுஷ்யர்கள் யாவருக்கும் பொதுவாய்க் கூறுகின்றேன். அதாவது ஒவ்வொருவனும் தன்தன் புத்தியைக்கொண்டு மத விஷயத்தில் இதுசரியா அல்லவாவென்று ஆலோசிக்கவேண்டும் கேவலம் குருட்டுநம்பிக்கையைக் கைபிடித்துக்கொண்டு பெரியார் சொன்னார் சாஸ்திரம் கூறுகின்றது. வேதம் ஓலமிடுகிறதென்றுமட்டிலும் நம்பிவிடக் கூடாதென்று பலவாறு ஸ்வாமிகள் கூறினர் என்றுபெருமையாய் தெரிவித்தார்.

ஆஸ்திகர்களே! இங்கும்சற்று நிதானமாய் யோசித்துப் பாருங்கள். அத்வைதிகள் வருந்துகின்றனரே என்றால் குருட்டு நம்பிகையால் மதத்தை நம்பக்கூடாதென்பதாபதில்?நம்மவர்கள் குருட்டு நம்பிக்கையைவைத்தா நம்புகிறோம். நம்மதத்தில் இல்லாத யுக்தி எந்த மதத்திற்கு உண்டு நம்சாஸ்திரங்கள் எதிரிகளின் ஆக்ஷேபங்களை நம்மால் நினைக்கமுடியாதபடியெல்லாம் கிளப்பி அதற்கு அழகாயும் ஸுலபமாயும் கூறியிருக்கும் ஸித்தாந்தம்போல் எந்தமதத்தில் கூறமுடியும். குருட்டு நம்பிக்கையென்று நம்மவர்களுள் தேசமுன்னேற்றத்திற்குப் பாடுபடுவர்கள் சொல்லும் வார்த்தை மடாசார்யாரின் முகத்திலிருந்தும் வரவேண்டுமோ இருக்கட்டும் இதுவும் கலியின் கோலமே.

இன்னொன்று இங்கு கூறவேண்டியதுண்டு. இவ்விதம் இம்மடாசார்யார் சிற்சில சமயங்களில் தம்மனதிலுள்ள அத்வைத

மதத்தின் த்வேஷத்தை வெளியிடுவதுமுண்டுபோலிருக்கிறது. வடதேசத்தில் கொல்ஹாபுரம் என்ற ஊரில் அப்பாசர்மாவென்ற ஓர் பண்டிதோத்தமர் 25 வருடங்களுக்குமுன்வரை ஸம்ஸ்கிருத சந்திரிகை என்ற ஓர் பத்திரிகை நடத்திக்கொண்டிருந்தனர். அவர் சாஸ்திரத்தில் மிக நிபுணரென்பதற்கு அத்தாக்ஷியாய் வித்யாவாசஸ்பதி என்ற பிருது பெற்றிருந்தார். ஸம்ஸ்கிருதத்தில் போல்ராஜ பாஷையிலும் மிகத்தேர்ந்தவர். அவர்காலத்தில் இம் மடாதிபதிகள் அத்தேசம்போயிருந்தகாலத்திலோ அல்லதுவேறு துவைதமடாசார்யரோ அங்கு சிஷ்யார்ஜனம் செய்யுங்காலத்தில் அம்மதத்தின் மர்மாஹஸ்யமான சுலோகங்களை உபதேசிப்பதுவழக்கம்போலிருக்கிறது. அப்போது அச்சிஷ்யருள் ஒருவர் அந்த சுலோகங்களை எழுதி அப்பாசர்மாவினிடத்தில் இவ்வாறு கேட்டார்.

கருடபுராணம் பிர்மகாண்டம் 2-வது அத்தியாயம் 19-வது சுலோகத்தில் **उत्तिष्ठमध्वेशसरस्वतीश** ஸாரஸ்வதிக்கு அதிபதியான மத்வாச்சார்யரே எழுந்திரும் என்றும் ஸ்காந்தபுராணத்தின் உத்தாகாண்டத்தில்-ஸ்கந்த உவாச

मणिमत्पूर्वका दुष्टा दैत्या आसत् कलौयुगे ।
ते कुशास्त्रं प्रकल्पन्तो हरिवायु विरोधिनः ॥
तेषां मध्ये सङ्करस्तु पूर्वं यो मणिमान्खलः ।
सौगंधिकवनेदिव्ये भीमसेनहतोऽसुरः ।
यः क्रोधतंत्रकोदुष्टां मिथ्याशास्त्रं वदन्पुनः ।
कृष्णे भीमे च विद्वेषं कुर्वन्भूमावजायत ॥
कालटीग्रामके रुद्रवराज्जगद्विमोहयन् ।
बौद्धशास्त्र परोविप्रोयः कश्चिद्द्वापरशिष्यकः ॥
ससंकरस्यसन्यस्य तस्मात्सन्यासरूपिणः ।
अद्वैतमतमित्ये तद्दुष्टं शास्त्रं च कारह ॥

கலியுகத்தில் மணிமான் என்பவனை தலைவனாகக்கொண்ட அஸுரர்கள் இருந்தனர். அவர்கள் கெட்டசாஸ்திரங்களைச் செய்துகொண்டும் ஹரியினிடத்திலும் வாயுவினிடத்திலும் விரோதமுள்ளவர்களாயுமிருந்தனர். அவர்களுள் ஸங்கரனை மணிமானென்ற

துஷ்ட அஸுரனை திவ்யமான ஸௌகந்திகவனத்தில் பீமஸேனன் கொன்றுவிட்டார். மிகக்கொடிய கோபமுள்ளவனுமான அம் மணிமான் மறுபடியும் துஷ்டசாஸ்திரங்களைச் சொல்லிக்கொண்டு கிருஷ்ணனிடத்தும் பீமனிடத்தும் த்வேஷத்தைச் செய்து கொண்டே ருத்திரனின் வரத்தால் உலகத்தை மயக்கிக்கொண்டு அவன் மறுபடியும் காலடி என்னும் கிராமத்தில் பிறந்தான். பௌத்த சாஸ்திரத்தில் ஆழ்ந்தவனும் இரண்டொரு சிஷ்யர்களோடு கூடினவனும் அவன் ஸன்யாஸம் செய்துகொண்டு அத்வைதமதம் என்ற துஷ்ட சாஸ்திரத்தைச் செய்தான் என்று இந்த சுலோகங்களும் ஸ்காந்தத்தில் இருப்பதாய்த்தெரிகிறது. இது எங்கள் மதஸ்தர்கள் கொண்டாடிய பிரமாண கிரந்தமென தினந் தோறும் பாராயணம் செய்கின்றனர். இதில் எனக்கு எழும் ஆசங்கைகளை நீக்கி எங்களுக்கு உண்மையை விளக்கக் கேட்டுக் கொள்கிறேன் எனக்கு இதில்தோன்றும் ஆசங்கை இது.

ஸ்ரீ வியாஸர் வெகுகாலத்திற்குமுன் எழுதிய பதினெண் புராணங்களில் ஒன்றான இத்தகைய புராணத்தில் மத்வாசார்யரைப்பற்றியும் சங்கரரைப்பற்றியும் எழுதக் காரணமுண்டா. அவ் விதமாயினும் இவ்விதம் சங்கரரை தூஷிப்பாரா? அல்லது இது சங்கரரிடத்தில் த்வேஷத்தால்வேறொருவரால் சேர்க்கப்பட்டதா? அல்லது முன்சொன்ன இரண்டு புராணமும் வியாஸரால் எழுதப் படவில்லையா இதன் தத்வமின்னதென்பதை விளக்கவேண்டு மென்று.

அத்வைத சிரோரத்னங்களே? இதைக்கேட்டும் நமக்கு மனது என்ன நிலைமையை அடைகிறது. இதற்கு நாம்பதிற்கூற ஆரம்பித்தால் வெகு தடபுடலாய்க் கூறிவிடுவோம். ஸ்ரீ அப்பா சர்மா அவர்கள் கூறியபதில்தான் நமக்குவேண்டும். அதனை வெளியிடுகிறேன். பிரிய மாத்வமித்திரரே! தாங்கள் எழுதியதும் தாங்களுக்கு மிக பிரமாணமானதுமான விஷயத்தை ஆராய்ந் தேன். இதற்கு சீக்கிரம் பதிற்கூறவேண்டுமானால் இது வியாஸரியற்றியதில்லை. ஏனெனில் ஒரு மதத்தை குறை கூறுவது அவருக்கு வழக்கமல்லவென்றாவது அல்லது வியாஸரியற்றிய புராணத்தில் மாத்வபண்டிதர் ஒருவரால் இது நடுவில் நுழைக்கப் பட்டதென்றாவது கூறிவிடலாம். இதனால் தங்களையும் நம்பச்

செய்துவிடலாம். ஆனால் அவ்வழிபோவதில் என் மனது எப்போதும் பிரியப்படுவதில்லை. புராணவசனம் தவறுஎன்றே கூறல் வேண்டாம். ஸ்ரீவ்யாஸர் மத்வரையும் சங்கரரைப்பற்றிச் சொல்வாரோவென்றும் எண்ணவேண்டாம் அவர் முக்காலமும் அறிந்தவரானதால் வரப்போகும் ஆசார்யர்களைப்பற்றியும் அதிகாரிகளின் மனப்பக்குவத்திற்கு தக்கபடியும் அவ்வசனங்கள் கூறித்தான் இருப்பார். ஆகவே நீங்கள் உங்கள் மதத்தில் பற்றுடனிருந்து அதனை ஸத்யமாய் நினைத்துப் பாராயணம் செய்து கடைத்தேறலாம். ஆனதால் ஸர்வபுராணங்களிலும்நான்நம்பிக்கையுடன் இருப்பது போல் நீங்களும் நம்பியிருக்கிறீர்களென்று கொண்டு இவ்வசனங்களைக் கூறுகிறேன் அவைகளை ஆதரவுடன் கேளுங்கள். கூர்மம், மார்க்கண்டேயம் பத்மம் வாயு, பிர்ம ஸௌரம் முதலிய புராணங்களில் பவிஷ்யத்தில்

परहंसात्मना सत्यः परमात्मा महेश्वरः ।
करिष्यत्यवतारं स्वं जंबुद्वीपे कलौ युगे ॥
दुष्टानां निग्रहार्थाय शिष्टानां रक्षणाय च ।
वेदराद्धान्तसंस्थित्यै सत्यरूपेण भारत ॥ इति ॥
चतुर्भिस्सहितश्शिष्यैः शङ्करोऽवतरिष्यति इति ।
कलौ रुद्रो महादेवो लोकानामीश्वरः परः ।
करिष्यत्यवतारं स्वं शङ्करो नीललोहितः ॥ इति ॥
व्याकुर्वन् व्याससूत्राणि श्रुतेरर्थं यथोचिवान् ।
श्रुतेर्न्याय्यस्स एवार्थः शङ्करस्सवितानन: ॥ इति ॥

பரமஹம்ஸரூபியாயும் ஸத்தியமாயும் பரமாத்மாவுமான மகேசுவரர் கலியுகத்தில் ஜம்புத்வீபத்தில் அவதரிப்பார். அவர் துஷ்டர்களை நிக்ரஹம் செய்வதற்காகவும் ஸாதுக்களை பரிபாலிக்கவும் வேத ஸித்தாந்தத்தை ஸத்தியமாய் நிலைநிறுத்தவும் அவதரிப்பாரென்றும் நான்கு சீடர்களோடு சங்கரன் அவதரிப்பானென்றும், கலியுகத்தில் மகாதேவனும் உலகங்களுக்குப் பரமேசுவரனும் நீலகண்டருமான சங்கரர்தானே அவதரித்தாரென்றும் அவர் வியாஸரது சூத்திரத்திற்கு எவ்விதம் அர்த்தம் கூறுவாரோ அதுதான் சுருதிக்கு நியாயமான அர்த்தமென்று பலகோடி வசனங்களிருக்கின்றன ஆகவே இவ்வாக்கியங்களுக்கும் அவ்வாக்கியங்களுக்கும் விரோதமிருப்பதால் எது எடுத்துக்கொள்ளத்தக்கது, எது

தள்ளத்தக்கதென்று கவனித்தால் ஒரு புராணத்தில் கூறியுள்ள ஸ்வல்பவசனம் அநேகபுராணங்களின் பலத்தால் தள்ளத்தக்கதென்று தான் புராணமறிந்தவர்கள் கூறுவார்களென்ற நியாயம் தங்களுக்கும் புலப்படும். மற்றும் ஸ்காந்தம் கேதாரகாண்டம் 61-வது அத்தியாயத்தில் கருடனைப்பார்த்து பகவான் கூறுவது--

क्रोधः कर्णाटदेशीयः कामशास्त्रं समीक्ष्यच ।
स्वयं व्याख्यास्यते पुत्रसाद्विरुद्धमते स्थितः ।
तत्ववादसमाख्यां च कृत्वा तस्मिन् निजागमे ।
श्रुतिस्मृतिपुराणानि भंजयिष्यति सर्वशः ॥
स्वयं करिष्यते पुत्रपुराणानि श्रुति स्मृतीः ।
अष्टादशपुराणेषु स्मृतिष्वष्टादशस्वपि ॥
अद्वैतनिरतं सर्वं वाक्यमुत्पाटयिष्यति ।
कारयिष्यति पुण्ड्राणि वेणुपत्राकृतीनि च ॥
स्वकल्पितपुराणानि स्थापयिष्यतिभूतले ।

கர்ணாடதேசத்தவர் கோபமூர்த்தி காமசாஸ்திரத்தைப் பார்த்து ஸாதுக்களுக்கு விரோதமான மதத்திலிருந்துகொண்டு தத்வ வாதமென்று பெயர்வைத்து ஓர் மதத்தை வெளியிடுவார். அதில் சுருதிஸ்மிருதி புராணங்களை நாசம்செய்வார். தானாக சுருதிஸ்மிருதி புராணங்களை கல்பனைச்செய்வார். பதினெண் புராணங்களிலும் பதினெட்டு ஸ்மிருதிகளிலும் அத்வைதத்திற்கு ஒத்ததான வாக்கியங்களைப் பிடுங்கிவிடுவார். மூங்கில் இலைபோல் நாமங்களைச் செய்யச்செய்வார். தான் இயற்றிய புராணங்களை பூமியில் ஸ்தாபிப்பார் என்றிருக்கிறது. ஆகவே இது உங்களது மதாசார்யரைத்தான் கூறுகின்றது. இன்னொன்றும் இங்கு கவனிக்கலாம். அத்வைதத்தை ஸ்தாபித்தவர் பிரஸித்தமாய் மும்மதத்தவரும் அத்யயனம் செய்யும் ச்ருதிகளையே மேற்கோளாகக்காட்டியிருக்கிறார். அவரது மதம் மோகசாஸ்திரமென்று வேறுயாரும் ஒப்புக்கொள்ளவில்லை. விமதஸ்தர்களும் அத்வைதத்தையே மதமென்று ஒப்புக்கொள்கிறார். மற்றும் பௌத்த சாஸ்திரத்தில் ஆழ்ந்தவர் என்று சொல்வதற்கேயில்லை. ஏனெனில் அவரது அவதாரம் பௌத்தமதத்தை நாசம்செய்வதற்குத் தான். பாஷ்யத்திலும் புத்தரைப்பற்றி மிகவும் நிந்தித்திருக்கிறார்.

ஆகவே அதுவும் பிரமாணமாய் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இனி த்வைதாசார்யரைப்பற்றிக் கூறியிருக்கும் விஷயம் ஒவ்வொன்றும் பொறுத்தமுடையதாய் இருக்கிறது. கோபமென்பது ஸ்வதஸ்ஸித்தம், கர்ணாடதேசத்தவர் சுருதிஸ்மிருதி முதலிய முக்கியப் பிரமாணங்களைத் தன் பாஷ்யத்திற்காக காட்டவே இல்லை. ஆஸ்திகன் யாரும் காதிற்கேட்காத பெயர்களுள்ள சுருதிகளை ஏராளமாய் கல்பனை செய்திருக்கிறார். அவ்விதமே புராணவசனங்களையும், ஆகவே தடஸ்த புத்தியுள்ள தங்களுக்கு இதைக்காட்டிலும் அதிகம் எழுதவேண்டாம். அபியுக்தாள் கூறும் இன்னும் ஒரு சுலோகத்தைமட்டிலும் சொல்லி இதனை நிறுத்திக்கொள்கிறேன்

धृत्वा कैरातवेषं मनसिजरिपुणा दानवो मूकनामा
रक्षार्थं पाण्डुसूनोः प्रकटकिटिवपुर्यो हतः पूर्वमद्रौ ।
सोयं पाषण्डवादी समजनितुलवः क्रोधनो निष्क्रियार्थ
गर्भे मात्सर्यबुद्धिः धरणितलगतो भेदवादान् जजल्प ॥

என்று அத்வைதிகளே? இவ்விதம் அப்பாசர்மா பத்திரிகைமூலம் எழுதியதைப்பார்த்து அன்றுமுதல் அத்வைத மதத்தைப்பற்றி வெளிப்படையாய்ப் பேசுவதை நிறுத்திவிட்டார். ஆகவே இப்போது இவ்விதம் கிளம்பியிருக்கும் த்வைதாசார்யருக்கு வாயடைக்க வழிசெய்யாதவரை அவர் எங்கும் பேசிக்கொண்டே போவார்போலிருக்கிறது. இப்போது நாம் சும்மாவிருப்போமேயானல் மிக மோசமாகுமென்பதை நன்கு கவனிக்கவேண்டும். உலகெலாம் பிரஸித்தமான பத்திரிகை அவர்கையிலிருக்கிறதென்பதை ஆலோசியுங்கள்.

## த்வைதிகளிடம் விண்ணப்பம்.

மாத்வசிரேஷ்டர்களே? லௌகிகத்திலும் ஸாமர்த்தியம் பெற்ற உங்கள் முன்னிலையில் வேண்டிக்கொள்வது இது. தற்காலம் உங்களது மடாதிபதிகள் அகாரணமாய் அத்வைதமதம் அவைதிகமென்று ஆங்காங்கு கூறிக்கொண்டு அத்வைத பண்டிதர்களை நோட்டீஸ் மூலம் இழுத்து வாதம்செய்வதும் தைரியமாய் கேட்கும் பண்டிதர்களிடத்தில் அத்வைதம் அவைதிகமென்றால் இழிவான அர்த்தமல்ல அத்வைதம் வேதத்தில் சொல்லப்படவில்லையென்றும் இன்னும் இழிவாயும் தத்வார்த்தத்திற்குத்தான் இவ்விதம் கூறுகிறேனென்றும் வாயில்வந்ததையெல்லாம் கூறிக்கொண்

டும் அடிக்கடி ஹிந்து பத்திரிகைகளையில் பிரசுரிக்கிறதுமாய் கார்யம் நடந்துவருகிறது தங்களுக்கும் தெரிந்திரிக்கும். மதமே வேண்டாம். வர்ணாச்ரமதர்மமே வேண்டாமென்று சொல்லும் தொனி சமுத்திரகோஷம்போல் புறண்டு நம்மீது விழுந்து அமிழ்த்தும் போலிருக்கும் இக்காலத்தில் இவ்வாறு எங்களையும் புண்படுத்தும் போது நாங்கள் துவைதம அவைதிகமென்று கூற தலைப்படுவதா, அவ்விதமாயின் அடுத்தக்ஷணம் நம் பொதுவான ஹிந்துமதத்தில் எவ்வளவு துவேஷமேற்படும். அதனாலாகும் பயனென்ன காங்கிரஸ் கொள்கைக்குக் கைகொடுத்தோம். ஆனால் நாங்கள் ஒருகாலத்திலும் அவ்வாறு கூறமுன்வரமாட்டோம். ஏனெனில் வ்யவகார தசையில் நாங்கள் துவைதிகளே. ஒருபோதும் அத்வைதம் உங்களுக்கில்லையென்றுகொண்டு அவ்விதம் கூறமுற்படுவது ஸாஹஸம். ஆகையால் உங்களாசார்யர்களிடம்போய் நீங்கள் வேண்டிக்கொண்டு இவ்விதவசனத்தை இனிக்கூறுதிருக்கும்படி பிரார்த்திக்கவேண்டும். அத்துடன் வர்ணாச்ரம தர்ம ஸம்ரக்ஷணைக்காகத்தன் சக்தியளவு நாமெல்லோரும் சேர்ந்து உழைக்கவும்வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளவேண்டும். ஒருசமயம் உங்களது ஆசார்யருக்கு அத்வைதத்தில் கோபத்தினுல் அது வேதத்தில் கூறப்படவில்லையென்பதைத்தன் வைதுஷ்யத்தால் ஸ்தாபிக்கமுடியுமென்று நினைத்தால் ஸம்ஸ்கிருதத்தில் தக்க பிரமாணங்களுடன் ஓர் கிரந்தம் எழுதி அச்சிட்டு அதை அத்வைதபண்டிதர்கட்கும்அவர்களது மடங்களுக்கும்அனுப்பட்டும். இதுதான் நம்முதறிஞோரின்வழி அல்லது முக்கியமாய்ச்செய்யவேண்டிய ஓர் கடமை அவர்கள் தலைச்சுமையாய் இருக்கிறது. அதாவது ஸ்ரீமான் அப்பய்ய தீக்ஷிதரவர்கள் மத்வமதவித்வம்ஸனம் என்ருேர் கிரந்தம் எழுதியிருக்கிருர்கள். அதற்கு நாளதுவரை துவித மடாசார்கள்கண்டனம்எழுதவேயில்லை. அத்தகையதைஇம்மடாதிபதி கண்டித்துவிடில் அதற்கு வேறு மறப்பு அத்வைதபண்டிதர்கள் எழுதுகிறவரை அவருக்குப்பேரும்புகழும் புவியிலோங்கும். ஆகவே இவ்விதமெல்லாம்சுலபவழிபல இருக்கமிக குறுகலான இவ்வழியில் போவதற்கு ஸ்வாமிகளுக்குக்கொஞ்சமேனும் நியாயமில்லை. மாத்வமத ஆஸ்திகர்களே எவ்விதத்தாலாவது ஸ்வாமிகளை நல்வழியில் திருப்பிவிடக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். நான் சொல்லும் வசனங்களிற் குற்றமிருப்பின்நிரூபித்தால் ஏற்போம்.

சுபம். M. N. சுப்ரமண்யசாஸ்திரிகள்.

# அத்வைத மதம் வைதிகம்.

(325-வது பக்கத்தொடர்ச்சி)

கீழ்க்காட்டிய லக்ஷணத்தோடு கூடியதர்மம், ज्योतिष्टोमेन स्वर्गकामो यजेत (ஸ்வர்க்கத்தை விரும்பியவன் ஜ்யோதிஷ்டோமமென்னும் யாகத்தால் அந்தஸ்வர்க்கத்தை ஸம்பாதிக்கக்கடவன்' என்னும் வசனத்தால்ஸ்வர்க்கம்முதலிய இஷ்டபலத்திற்குஸாதனமாய் விதிக்கபட்ட ஜ்யோதிஷ்டோமயாகம் முதலிய கர்மம். யாகம் என்பது देवतोद्देशेनद्रव्यत्यागोयाग: தேவதையை உத்தேசித்து அதாவது ஸ்மரித்துஅந்த தேவதையின்பொருட்டு ஆஜ்யம் புரோடாசம் முதலியத் திரவ்யத்தை தியஜிப்பது அதாவது इन्द्रायेदंनमम இது இந்திரனுடையது என்னுடையதன்று என்று மனதினால் ஸங்கல்பிப்பது என்று கூறியபடி எஜமானன் செய்யும் க்ஷணிகமான மானஸிக கர்மவிசேஷம். இதுபோலவே தானம் ஹோமம் முதலியதும் க்ஷணிகமாகிய கர்ம விசேஷம்தான். இதுதான் தர்மமெனப்படும். ஸ்வர்க்கம் முதலிய இஷ்டத்திற்குச்சாதனமானதால் இஷ்டமாகிய யாகம் ஹோமம் முதலியதற்குச் சாதனமான பால் தயிர் முதலிய திரவ்யம் குணம் முதலியதும் மீமாம்ஸா சாஸ்திரத்தில் தர்மமென்று வியவஹரிக்கப்படும். ஈண்டு இவ்விதம் க்ஷணிகமாகிய யாகம் முதலிய கர்மம் எவ்விதம் காலாந்தரத்தில் உண்டாகும்ஸ்வர்க்கம் முதலியஇஷ்டத்திற்கு காரணமென்று சொல்லமுடியும். कार्यनियतपूर्ववर्तिकारणं (கார்யமுண்டாகுமிடங்களிலெல்லாம் தவறாது அக்கார்யத்திற்கு அடுத்த முன் க்ஷணத்தில் இருப்பது காரணம்' तदुदितस्सहियोयदनन्तर: எந்த வஸ்து எந்தவஸ்துவிற்கு அடுத்தாப்போலுளதோ அந்த வஸ்து அந்த வஸ்துவினாலுண்டானது. என்னும் சாஸ்திர பிரவர்த்தகர்களுடையவும் மஹாகவிகளுடையவும் வசனங்களினாலும் லோகானுபவத்தினாலும் கார்யத்திற்குமுன் க்ஷணத்தில் இருப்பதல்லவோ காரணமென்று சொல்லவேண்டும். அப்படியிருக்க எப்பவோ ஏற்படும் ஸ்வர்க்கத்திற்கு எப்பவோ உள்ள யாகம் எப்படிக்காரணமென்று ஒப்புக்கொள்வது. க்ஷணிகமானதால் நஷ்டமாய்ப்போன யாகம் முதலியதாலும் காலாந்தரத்தில்

ஸ்வர்கம் ஏற்படுவதாயிருந்தால் மரித்துப்போன தம்பதிகளாலும் காலாந்தரத்தில் குழந்தைகள் ஜனிக்கவேண்டும். அப்படிக்காண்ப தில்லை இதற்காக யாகமே ஸ்வர்க்கம் உண்டாகும்வரையில் இருக்கிறதென்பதும் யாகம் க்ஷணிகமாயிருப்பது பிரத்யக்ஷ ஸித்தமாயிருப்பதால் பொருந்தாது. இக்கருத்தையே

विनष्टस्यासतस्तावन्नकार्यारंभ संभवः ।
क्षणिकत्वेन सिद्धस्य नावस्थानञ्च युक्तिमत् ।

“நசித்துப்போய் அதனலில்லாமலிருக்கும் வஸ்துவிலிருந்து கார்யத்தின் உத்பத்தி ஸம்பவிக்காது. க்ஷணிகமாகப் பிரத்தியக்ஷத்தால் காணப்படும் வஸ்துவிற்கு வெகு காலம் இருப்பை ஒப்புக்கொள்வதும் யுக்திக்கு ஒவ்வாதது” என்று சாஸ்திர தீபிகை என்னும் கிரந்தத்தில் ஸர்வதந்திர ஸ்வதந்திராளான பார்த்தசாதி மிச்ராளும் கூறியுள்ளார்கள். என்னுமாசங்கைக்கு ஸமாதானம் கூறுவாம். பிரமாணமாகிய சுருதியில் யாகத்தை ஸ்வர்கத்திற்குக் காரணமென்று கூறியிருப்பதால் அது எவ்விதம் பொருந்துமோ அவ்விதம் கல்ப்பிப்பது பிராமாணிகர்களுக்குக் கடமையாதலால் யாகத்தினல் அபூர்வம் என்னும் ஓர் வஸ்து உண்டாகி அது ஸ்வர்கம் ஏற்படும் வரையில் இருப்பதாகவும் ஸ்வர்கம் என்னும் பலத்தினல் நசிப்பதாகவும் ஒப்புக்கொண்டு அதைத் துவாரமாகக் கொண்டு அதன் மூலமாக யாகம் ஸ்வர்கத்திற்குக் காரணமாகுமென்று சொல்வது உசிதம். எவ்விதம் விறகானது ஜ்வாலையின் மூலமாக சமையலுக்கு ஹேதுவாகின்றதோ எவ்விதம் கோடாலியானது உயரத்தூக்கிப் போடுதலின் மூலமாகக் கட்டையை இரண்டாக்குவதற்கு ஹேதுவாகின்றதோ, ஜ்வாலை உயரத்தூக்கிப் போடுதல் இரண்டும் முறையே சமையலுக்கும் இரண்டாக்குவதற்கும் காரணமானலும் அதனல் விறகும் கோடாலியும் அவ்விடத்தில் காரணமில்லையென்று போகாமல்

व्यापारेणव्यापारिणोनान्यथासिद्धिः ।

‘துவாரமாக ஒப்புக்கொள்ளப்படும் காரணத்தினல் துவாரியாக ஒப்புக்கொள்ளப்படும் வஸ்துவிற்குக் காரணமாயில்லாமலிருக்குந் தன்மை கிடையாது’ என்கிற நியாயப்படி காரணமாகின்றதோ, குடத்திற்கு அதை உண்டுபண்ணும் குயவன் காரணமேயன்றி

அந்தக் குயவனைப்பெற்றவனும் காரணமாகின்றதில்லை என்பது உசிதம். ஏனெனில் அங்கு குயவனைப் பெற்றவன் குடத்தைக் குயவன் துவாரமாக உண்டுபண்ணுகிறான் என்று குயவன் துவார காரணமாகவும் குயவனைப் பெற்றவன் துவாரியாகவும் ஒப்புக்கொள்ளப்படாதபடியால் இங்கு அதுபோலில்லாமல் விறகு ஜ்வாலையின் துவாரமாக சமையலுக்குக்காரணமென்றும் கோடாலி உயரத்தூக்கிப்போடுதலின் துவாரமாகக் கட்டையை இரண்டாக்குதலுக்குக்காரணமென்றும். அதனால் ஜ்வாலை உயரத் தூக்கிப்போடுதல் இரண்டுக்கும் துவாரகாரணமாகவும், விறகு கோடாலி இரண்டும் துவாரியாகவும் ஒப்புக்கொள்ளப்படுகின்ற படியால், இரண்டுமே காரணமோ அதுபோலவே யாகம் அபூர்த்தின் துவாரமாக ஸ்வர்கத்தை உண்டுபண்ணுகிறதென்றும் அதனால் அபூர்வம் துவாரகாரணமென்றும் யாகம் துவாரியென்னும் ஒப்புக் கொள்ளுகிறபடியால் இரண்டுமே ஸ்வர்க்கத்திற்குக் காரணமாகுமானபடியால் அபூர்வத்தைக் காரணமாக ஒப்புக் கொண்டால் அவ்வபூர்வத்திற்குக்காரணமாகிய யாகம் குயவனின் தகப்பனைப்போல் காரணமென்று சொல்லாமல் போகுமானபடியால் யாகத்தை ஸ்வர்க்கத்திற்குக்காரணமென்று சொல்லும் வேதத்திற்கு அப்ராமாண்யம் நேரிடுமென்னும் கேள்விக்கு அவகாசமில்லை. யாகத்தைக்காரணமென்று சொன்ன வாக்யத்தை உபபத்தியுள்ளதாய் ஸரிப்படுத்துவதற்காகவேதானே அபூர்வத்தை துவார காரணமென்று சொன்னோம். அதனால் துவாரியாகிய யாகம் காரணமில்லையென்று எப்படிக் கூறமுடியும். ஆகலால் அபூர்வமென்பது யாகம் ஸ்வர்க்கத்தை உண்டுபண்ணுவதற்கு அவாந்தர வியாபாரம் என்று முடிந்தது. அவாந்தர வியாபாரத்தில் சிலது வியாபாரி இல்லாதபொழுது இல்லாமல்போய்விடும். அதாவது தண்டத்தால் குடத்தை உண்டுபண்ணுவதற்கு அவாந்தர வியாபாரமாகிய சக்கிர பிரமணம் (குடத்திற்கு இருப்பிடமான சக்கரத்தைச் சுற்றுதல்) தண்டம் போனபிறகு அதிக காலம் இல்லாது போய்விடுகின்றது. அப்படிப்போலில்லாமல் அனுபவத்தினால் பிறகு நினைவு உண்டாவதற்கு அவாந்தர வியாபாரமாகிய ஸம்ஸ்காரம் அனுபவம் போனாலும் இருப்பது போலும். புஷ்டிக்காகச்செய்யும் தைலபானம் கிருதபானம் முதலியது புஷ்டிகாலத்தில் இல்லாமல் போனாலும் அதன்

அவாந்தர வியாபாரமான தைலம் முதலியதின் அவஸ்தாபேதங்களிருப்பதுபோலும். கிருஷி அத்யயனம் முதலியது பலகாலத்தில்லாமல் போனாலும், அதன் அவாந்தர வியாபாரமகிய ஸம்ஸ்காரமிருப்பதுபோலும், யாகம்போனாலும் அதன் அவாந்தர வியாபாரமாகிய அபூர்வம் இருப்பது பொருத்தமே. அல்லது அபூர்வம் என்பது யாகத்தின் சக்தியென்று ஒப்புக்கொள்ளலாம். அக்னியின் உஷ்ணத்தன்மையாகிய சக்தி தஹித்தாலும் அக்னியும் தாஹத்திற்குக் காரணமாவதுபோல் யாகத்தின் சக்தியாகிய அபூர்வம் ஸ்வர்க்கத்திற்குக் காரணமானாலும் யாகமும் காரணமாவது உசிதமே. சக்தமாகிய (சக்தியையுடைய) யாகம் போய்விட்டால் அதன் சக்தியாகிய அபூர்வம் ஆசிரயமில்லாததால் எப்படியிருக்கமுடியுமென்றால் கூறுவாம். எவ்விதம் நெருப்பினால் உண்டான அதன் சக்தியாகிய சூடு நெருப்பு அணைந்தபொழுதிலும் ஜலத்தில் இருக்கின்றதோ அதுபோல் யாகம் நஷ்டமாகப் போனாலும் அதன் சக்தியாகிய அபூர்வம் யாகத்தைச்செய்து ஸ்வர்க்கம் முதலிய பலத்தை அனுபவிக்கவேண்டிய யஜமானனிடத்தில் இருக்கிறதாக ஒப்புக்கொள்ளலாம். கார்யத்தை அனுஸரித்துக் கல்ப்பிக்கவேண்டியதாயுள்ள வஸ்து எப்படிக் கல்ப்பித்தால் பொருந்துமோ அப்படித்தானே கல்ப்பிக்கவேணும். இங்கு அபூர்வம் ஆத்மாவினிடத்தில் இருப்பதாகக் கல்பிப்போம். ஆத்மாவினிடத்தில் இருக்கும் சக்தியாவது யாகத்தாலுண்டாகும் ஸ்வர்கம் முதலிய பலத்தை அனுபவிக்கும் யோக்யதையே. இதுவே அபூர்வம். அல்லது யாகமாகிய பீஜத்தினால் (விதையினால்) ஸ்வர்க்மாகிய விருக்ஷம் அங்கு இருக்கும் அவஸ்தையே அபூர்வம். அதனால் காலாந்தரத்தில் விருக்ஷம் ஏற்படுவதுபோல் ஸ்வர்க்கம் ஏற்படுகின்றது என்று ஒப்புக்கொள்ளலாம். எவ்விதத்திலும் அபூர்வம் என்பது ஒன்று உண்டு. அபூர்வம் உண்டு என்பதை பூர்வமீமாம்ஸையில் இரண்டாவது அத்தியாயம் முதல் பாதத்தில் चोदनापुनरारंभः என்னும் ஐந்தாவது ஸூத்திரத்தில் பகவான் ஜைமினி மஹர்ஷியானவர் கூறியிருக்கின்றார்,

ஸூத்திரத்திற்கு

चोदना अपूर्वं पुनरस्ति यतः कर्मणा फलारंभश्चोद्यते ।

"சோதனையென்னும் பதத்திற்கு அர்த்தமாகிய அபூர்வம் என்பது உண்டு யாதொரு காரணத்தினால் யாகம்முதலிய கர்மாவினால்

ஸ்வர்க்கம் முதலிய பலம் உண்டாவதாக சாஸ்திரத்தால் சொல்லப்படுகின்றதோ, ஆகையால் அதைப்பொருத்துவதற்காக அபூர்வத்தை ஒப்புக்கொள்ளவேண்டும்" என்று அர்த்தம் ஸோமநாதீயத்தில் கூறப்பட்டிருக்கின்றது. இந்த அபூர்வத்தையே பிராபாகார்கள் என்னும் மீமாம்ஸக ஏகதேசிகள் கார்யம் நியோகம் முதலிய பதங்களினால் வியவகரிப்பார்கள். லிங் முதலிய பதங்களினால் சொல்லப்படுகின்றது என்றும் சொல்வார்கள். பாட்டர்கள் என்றும் மீமாம்ஸகர்கள் அபூர்வம் வேதத்தின் ஒரு பதத்தினாலும் சொல்லப்படுகிறதில்லை, ஆனால் श्रुतार्थापत्तिः வேதத்தினால் தெரிவிக்கப்பட்ட யாகம் ஸ்வர்க்க ஸாதனம் என்னும் விஷயம் அபூர்வத்தை ஒப்புக்கொள்ளாதபோனால் பொருந்தாது என்னும் அர்த்தாபத்திப் பிரமாணத்தால் கல்பிக்கப்படுகின்றது என்று கூறுவார்கள். இரண்டு மீமாம்ஸகர்களுக்கும் அபூர்வம் என்று ஓர் வஸ்து உண்டென்பதில் அபிப்பிராயபேதமில்லை. இவ்வித அபூர்வத்தை வேதாந்திகள் ஒப்புக்கொள்வதில்லை. அபூர்வத்தை ஒப்புக்கொள்ளாதபோனால் காலாந்தரபாவியாகிய ஸ்வர்க்கத்திற்கு யாகம் எப்படிகாரணமென்றும் வேதாந்திகள் கூறமுடியுமெனில் கூறுவாம்.

(தொடரும்)

போலகம், சு ஸ்ரீராமசாஸ்திரி.

---

உ

சிவமயம்.

# ஆஸ்திக தரும சர்வஜன சங்கம்.

மதாபிமானிகளின் கடமை.

இவண்நலம்; அவண்கோருவது மஃது. இத்தலைப் பெயர் கொண்ட சங்கம் மக்கள்பால் தொண்டாற்ற பிரமோதூத ஆண்டு புரட்டாசித்திங்கள் கஎ-ம் நாள் 2—10—31 அடியேனால் நிறுவப்பட்டது. தத்துவ ஆதாரமாயுள்ள சநாதன மதச்சிறப்பையும் தெய்வபக்தியையும் உண்டாக்குவதே சங்கத்தின் அடிப்படையானக் கொள்கைகளாகும். நாத்திகமத வைரிகளின் பிரசுரங்

களைக்கண்டு பாமரர்கள் மயங்காதவாறு ஆஸ்திகமத வெளியீடுகள் அவ்வப்போது அறிஞர்களின் உதவியைப்பெற்று வெளியிடப் படும். நாத்திகம் தடிப்பேறிவரும் இக்காலத்தில் வாளாயிருத்தல் தகுதியன்று. சகல மதஸ்தரும் ஒருமனப்பட்டுத் தீநெறிகளை யழித்து ஆஸ்திகத்தை நிலைப்படுத்தவேண்டும். இப்பெரு முயற் சியைச் செய்ய அற்ப அறிவையுடைய அடியேன் முன்வந்ததாகா தாயினும் மதக்கடமையை முன்னிட்டு என் கடமையை நிகழ்த்த முன்வந்தனன். ஆதலால், இந்நன் முயற்சிக்குத் தங்கள் ஆசீர் வாதமும் அநுக்கிரகமும் நன்கொடையும் அருளஈசுவரன் சங்கல் ப்பிப்பாரென்று நம்புகிறேன். மகழ்ச்சியுடன் பிரம்மார்ப்பணமாக அனுப்பும் நன்கொடைக்குச் சங்கத்திலிருந்து பணம் பெற்றுக் கொண்டதற்குப் பெறுமதிச்சீட்டு அனுப்பப்படும்.

இங்ஙனம்.
அன்பர் பணிபூண்டோன்,
காஞ்சி. வாசுதேவ ஐயர்,
சங்க நிர்மானிகள்

---

விலாசம்:—காஞ்சி. வாசுதேவ ஐயர், தமிழ்ப்பண்டிதர்,
போர்டு உயர்தரப் பாடசாலை, கிருஷ்ணகிரி (சேலம் ஜில்லா)

---

## ஸ்ரீ சங்கரஜயந்தி மகோத்ஸவம்.

ஸ்ரீ ஜம்புகேசுவர க்ஷேத்திரத்தில் விளங்கும் கும்பகோண நிவாஸிகளான ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீஜகத் குரு ஸ்ரீ சங்கராச்சாரியஸ்வாமிகள் அவர்களுடைய வித்யாஸ் தானத்தில் நிகழும் பிரஜாபதி-ஸு சித்திரைமீ 9உ புதன்கிழமை முதல் 5 தினங்கள் வழக்கம்போல் ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத் ஸவம் வெகுவிமரிசையாய் நடைபெற்றது. அச்சமயம் ஒவ்வொரு தினமும் ஷை ஜகத்குரு வித்யாஸ்தானம், உபாத்தியாயர்களாலும் வித்யார்த்திகளாலும் காலை 7 மணிமுதல் 10 மணிவரையில், உப நிஷத்பாராயணங்களும் ப்ரஸ்தானத்ரய பாஷ்ய பாராயணங்களும் செய்யப்பட்டு, அஷ்டோத்ர, ஸகஸ்ரநாம அர்ச்சனங்களுடன் ஸ்ரீ பகவத் பாதபூஜையும் பக்தி சிரத்தையுடன், வெகு விமரி

சையாய் நடத்தப்பட்டது. முதல்நாள் தினம் உத்ஸவத்தின் ஆரம்பத்திற்கு இந்த வித்யாசாலை கார்யதர்சி அவர்களும் கூடவேயிருந்து ஸகல காரியங்களையும் சிரத்தையாய் நடத்தினார்கள். 9வ புதன்கிழமை மாலை 7 மணிமுதல் $8\frac{1}{2}$ மணிவரையில் ஷை வித்யாஸ்தானம் வேதாந்த உபாத்தியாயர் சாஸ்திர திலகம் போலகம் பிர்மஸ்ரீ சு. ஸ்ரீராமசாஸ்திரிகள் அவர்களால் ஸ்ரீமதாசார்யபாதாளின் அவதாரவைபவம் என்கிற விஷயமும் 10வ இரவு ஷை வித்யாஸ்தானம் வியாகரண ஸாகித்ய உபாத்யாயர் மஹோப தேசக, கவிரத்ன பிர்மஸ்ரீ ப. பஞ்சாபகேச சாஸ்திரிகள் அவர்களால் ஸந்நியாஸ ஸ்வீகாரணம், என்கிற விஷயமும் 11வ இரவு திருச்சியில் பாஷ்யப்ரவசனம் செய்துகொண்டிருக்கும். போலகம் தர்மக்ஞ பிர்மஸ்ரீ சுந்திரசாஸ்திரிகள் அவர்களால் ஆசார்ய பாதாளின் திக்விஜயம் யென்கிற விஷயமும் 12வ இரவு விஷ்ணம் பேட்டை பிர்மஸ்ரீ விசுவநாத சாஸ்திரிகள் அவர்களால் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடஸ்தாபனம் யென்கிற விஷயமும் 13வ மாலை 4மணி முதல் $5\frac{1}{2}$ மணிவரையில் திருச்சி ஸெஞ்சோஸப் காலேஜ் ஸமஸ்கிருத புரொபஸர் திருவாலங்காடு பிர்மஸ்ரீ ரமசேஷ சாஸ்திரிகள் அவர்களால் அத்வைதமதமும் ஆசார்யாளின் பெருமையும் யென்கிற விஷயமும் இரவு 7 மணிமுதல் 8 மணிவரையில் ஷை பிர்மஸ்ரீ ப. பஞ்சாபகேச சாஸ்திரிகள் அவர்களால் தற்காலம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தில் விளங்கும் ஸ்ரீ சங்கர பகவத்பாதாள் லோக க்ஷேமார்த்தமாக ஆங்காங்கு விஜய யாத்திரை செய்துகொண்டும் சிறந்த உபதேச மொழிகளால் தர்ம ஸம்ஸ்தாபனங்கள் செய்துகொண்டும், மற்றும பிறரால் மனதினுல் கூட செய்வோமென்று நினைக்க வியலாத லோக க்ஷேமார்த்தமாய் செய்யப்பட்ட மிகவும் அற்புதங்களான பலகாரியங்களாலும் ஆதிசங்கர பகவத்பாதாளே மறுபடியும் இப்பூவுலகில் அவதரித்திருக்கிறார்களென்கிற விஷயமும் சகலஜெனங்களும் கேட்டு ஆனந்திக்குமாறு ஸ்பஷ்டமாய் உபந்நிய ஸிக்கப்பட்டது. ஒவ்வொரு தினங்களிலும் உபந்யாஸ காலங்களில் ஷை வித்யாஸ்தானம் ஸெக்கெட்ரியும் குருபக்த சிகாமணியுமான திருச்சி வக்கீல் V. ஜெயராம அய்யர் அவர்களும் கூடவேயிருந்து அக்ராசனம் வீற்றிருந்து ஷை உபந்யாஸங்களின் ஸாராம்சங்களை எளியதமிழ் நடையில் யாவரும் கேட்டு ஆனந்திக்கும்படி உபந்யஸித்தார்கள்.

ஒவ்வொருதினத்திலும் உபன்யாஸ காலங்களில் உள்ளூர் மஹா ஜனங்களும் வெளியூர் பக்தஜனங்களும் சிரத்தையாய் வந்து ஸ்ரீ பகவத்பாதாளுடைய புண்யசரித்திரங்களைச்சிரவணம் செய்து முடிவில் விநியோகம் செய்யப்பட்டபல மந்திராக்ஷதங்களையும் பிரஸாதங்களையும் பெற்றுக்கொண்டு ஸந்தோஷத்தை அடைந்தார்கள். இவ்விதம் ஒவ்வொருநாளும் சிறப்பாய் நடந்து முடிவு தினத்தில் இந்த க்ஷேத்திரத்தின்கண் விளங்கும் வேத பாடசாலைகளிலுள்ள ருக் யஜுஸ் ஸாமம் என்கிற மூன்று வேதங்களையும் அத்தியயனம் பண்ணும்ஸகல வித்தியார்த்திகளுக்கும் மற்றுமுள்ள ஸாமான்ய ஜனங்களுக்கும் பகலில் ஸந்தர்ப்பணையும் நன்றாய் நடைபெற்றது. அன்று இரவு சுமார் 8 மணிக்கு சிறந்த முத்துமாலைகளாலும் புஷ்பங்களாலும் அலங்கரிக்கப்பட்டசிகாத்தை யுடையதும் முந்தி இரண்டுபக்கங்களிலும் பார்சவ பாகத்தில் பிர்மா, விஷ்ணுபோல் விளங்கும் இரண்டு பிம்பங்களுடன் கூடியதும் மற்றும் தர்சிக்கும் ஜனங்களுடைய மனதிற்கு அடங்கா மகிழ்ச்சியை உண்டுபண்ணும்படி அலங்கரிக்கப்பட்ட மிகவும் உத்தமமான விமானத்தில் ஸ்ரீ சங்கரபகவத்பாதாளுடைய படத்தை சிறந்த புஷ்பங்களாலும் பட்டுக்களாலும் அலங்காரம் செய்துவைத்து ஊர்வலம்செய்ய உபக்ரமித்தார்கள். அந்த ஸமயம் போட்டிருந்த காந்த விளக்குகளாலும் வாத்தியகோஷங்களாலும் பின் மூன்றுவேதங்களையும் பக்தியாய் பாராயணம் செய்துகொண்டுவந்த வித்தியார்த்திகளின் கூட்டங்களையும் மற்று ஸ்ரீ பகவத்பாதாளை தர்சித்து தம் ஜன்மாவைப் புனிதமாகச் செய்துகொள்ளவேண்டுமென்கிற அவாவின் ஆதிக்யத்தாலும் திருடபக்தியாலும் வந்திருந்தபல பக்தகோடிகளாலும் சூழப்பட்டிருந்ததைப்பார்த்தால் கைலாசபர்வதத்திலிருந்து ஸகலதேவதைகளுடன் ஸ்ரீ சங்கரர் இங்கு அவதரித்திருக்கிறாரென்று ஸகல ஜனங்களும் தர்சித்து ஆனந்தக்கடலிலமிழ்ந்தார்கள். இவ்விதம் மிகவும் உத்ஸாகத்துடன் ஊர்வலத்தை நடத்தி ஊரிலுள்ள ஸகல ஜனங்களுக்கும் ஸ்ரீ மதாசார்யாளைத் தர்சித்து அவர்களுடைய அனுக்கிரகத்திற்குப் பாத்திராளாகும்படிசெய்து ராத்திரி 7-மணி சுமாருக்கு ஸ்ரீமடத்திற்குள் ஆசார்யாள் விஜயமானார்கள். அன்றையதினம் பகல் 4-மணிக்கு இவ்விதம்வந்த ஷை வித்தியாஸ்தானம் கார்யதரிசி அவர்கள் அதுமுதல் நடக்கவேண்

டிய ஸகல காரியங்களையும் கூடவேயிருந்து சிரத்தையாய் நடத்தி வைத்து ஊர்வலத்திற்கும் கூடவேயிருந்து ஸகல ஜனங்களையும் ஆதரவுடன் வரவேற்றுப் பிரியமாய் அழைத்துவந்து மடத்திலும் ஆசார்ய தர்சனம்செய்துவைத்து முடிவுவரையில் கூடவேயிருந்து எல்லாஜனங்களுக்கும் விசேஷ திருப்தியையுண்டுபண்ணி வைத்தார்கள். ஸ்ரீ பரமாசார்யாள் ஸ்ரீ மடத்தைவிட்டு ஊர்வலத்திற்கு புறப்பட்டதுமுதல் உள்ளூர் அசேஷ மஹாஜனங்களும் மிகவும் பக்திசிரத்தையுடன் கூடவேயிருந்து ஸ்ரீமடத்திற்குள்ளும் ஆசார்யாள் விஜயமானதும் ஸகல ஜனங்களும்வந்து அந்தஸமயம் நடந்த கர்பூரதீபாராதன தர்சனத்தையும் செய்துகொண்டு ஸ்ரீ குரு அனுக்கிரகத்திற்கும் பாத்திரர்களாயும் உடனே விநியோகம் செய்யப்பட்ட பிரஸாதங்களையும்பெற்று அதிக ஆனந்தத்தை அடைந்தார்கள். இவ்விதம் நம்பரமாசார்யாளுடைய அனுக்கிரக பலத்தால் இவ்வாண்டு சங்கரஜயந்தி உத்ஸவம் நன்றாய் நடைபெற்றது. ஸகல ஜனங்களையும் அளவிலாவானந்தக்கடலில் முழுகும்படிசெய்து பூர்த்தியடைந்தது. சுபம்.

வே, ராதாகிருஷ்ணன்.

---

## ஆசார்ய சரித்திரச் சுருக்கம்.

अज्ञानांधतमोवृतं जगदिदं विज्ञानसूर्योद्भवैः
सत्तेजोनिवहैर्विधातुमनिशं स्वच्छंपुरा यः प्रभुः ।
ब्रह्मेन्द्रादिमरुद्गणैस्सविनयं संप्रार्थितः शंकरः
लोकेवातरदादरेणसमहान् तन्यात् शिवं नः शिवः ॥

முன்னொரு காலத்தில் அக்ஞானமெனப் பெயர்வாய்ந்த அதிகமான இருட்டால் சூழப்பட்ட இந்த ஜகத்தை விக்ஞானமென்கிற கதிரவனிடமிருந்து உண்டான சிறந்த தேஜஸ் கூட்டங்களால் நிர்மலமாகச்செய்யவேண்டுமெனக் கருதிபிரும்மா இந்திரன் முதலிய தேவகணங்களால் பலவந்தனங்களுடன் மிகவும் பிரார்த்திக்கப்பட்ட பிரபுவானஎந்த சங்கரரானவர்கைலயங்கிரியிலிருந்து இப்புவியை ஆசார்யரூபமாக அவதரித்து அலங்கரித்தாரோ, சிவ ஸ்வரூபியான அந்த மகான் நமக்கு மங்களத்தை அளிக்கட்டும்.

बाल्येमोदागतविमल सत्शास्त्रबृन्दस्स्वमातुः
कृत्वाश्रेवां तदनुमतिसंप्राप्ततुर्याश्रमस्सन् ।
गोविन्दश्री गुरुवरमुखोद्भूत तत्वोपदेशं
स्वीकृत्यास्मात् सकलशुभदां प्राप वाराणसीं ताम् ॥२॥

ஸ்ரீ பகவத்பாதாசார்யாள் சிறுவயதிலேயே ஸந்தோஷத்தால் தாமாகவந்து அடையப்பட்ட ஸகல சாஸ்திரங்களையுடையவராய்க் கொண்டு கொஞ்சகாலம் மாதாவின் சுச்ரூஷையில் ஈடுபட்டவராக இருந்து அவ்வன்னையின் அனுமதியின்பேரில் நான்காவது ஆச்ரமமெனஎல்லோராலும்போற்றப்படும்ஸன்யாஸாச்ரமத்தை அடைந்து முறைப்படி அதற்குவேண்டிய உபதேசம் பெறவேண்டி நர்மதா நதிக்கரையில் விளங்கும் ஸ்ரீ கோவிந்தபகவத்பாதாள் என்கிற மகானை குருவாக அடைந்து அவர்களால் அனுக்ரகிக்கப்பட்ட மகாவாக்யோபதேசத்தைப்பெற்று அவர்களின் ஆக்ஞையை அடைந்து அங்கிருந்தும் எவ்வித சுகத்தையும் எளிதில் கொடுக்கும் சக்தி பொருந்திய வாரணஸி என்னும் உத்தமக்ஷேத்திரத்தை அடைந்தார்கள். (௨)

प्रगृह्यसदनुग्रहं शुकपितुश्चविश्वेशितुः
विधाय विविधान्यपि प्रथितशास्त्रवर्याणि यः ।
सनन्दन सुधीप्रदःसकलवन्द्यपादांबुजः
पुरेत्रविरराज नःससुखदो गुरुस्यात्सदा ॥३॥

ஸ்ரீ காசிமாநகர்சென்றதும், அங்கு தம்மை குருவாக அடைந்து அனுக்கிரகிக்கவேண்டுமென்று சிஷ்ய பாவத்துடன் அடிபணிந்து பக்திசிரத்தையுடன் கைகூப்பி நிற்கும் பத்மபாதருக்கு ஆத்மதத்வோபதேசம் செய்து சிஷ்யராகக்கிரஹித்துக்கொண்டு அவருக்கும் மற்றுமுள்ள சிஷ்யர்களுக்கும் பாஷ்பபாடம் சொல்லும் சமயத்தில் பரீக்ஷிக்கவேண்டிவந்த ஸ்ரீ வியாஸபகவானுடன் வாதம் புரிந்து முடிவில் மிகவும் சந்தோஷத்துடன் அவரால் அனுக்கிரஹிக்கப்பட்ட 16-வயது அதிகமாக ஆயுளையடைந்து கங்காநதியில் ஸ்நாநம்செய்து திரும்பிவரும் சமயத்தில் சண்டாளவேடம் பூண்டு விச்வநாதருடனும் வாதம் நேர்ந்து கடைசியில் அவரால் செய்யப்பட்ட அனுக்ரஹத்தையும்பெற்று மிகவும் சிறந்ததும் பிரசித்திபெற்றதுமான பல பாஷ்யக் கிரந்தங்களையும் லோகோப

காரத்தின்பொருட்டு எவர் இயற்றி இருக்கின்றாரோ அவ்வித மஹிமைபொருந்தியவரும் ஸகல ஜனங்களாலும் நமஸ்கரிக்கத் தகுந்த பாதங்களையுடையவருமாய் வாராணஸியில் விளங்கிய ஸ்ரீஜகத் குருவானவர் எப்பொழுதும் நமக்குக்ஷேமத்தைக்கொடுக்கட்டும். (3)

मण्डनं च ततोविजित्य महेशशैलमवाप्यतत्
प्रीतिलब्धसुलिंगपञ्चक भूषितावनिमागतः ।
स्थापयन् भुवितत्रतत्र च मातृयज्ञमथाचरन्
सर्वदिक्षुचरन् गुरुर्विजयायपातुमहान् समाम् ॥४॥

ஸ்ரீ சங்கர குருவானவர் வாராணஸியைவிட்டுக்கிளம்பி கர்மமார்க்கத்தில் மிகவும்பற்றுதலுடையவரான மண்டனமிச்ராயையடைந்து அவருடன் வாதப்போர்புரிந்து வெற்றிபெற்று அங்கிருந்தும் கைலாசபர்வதத்தையடைந்து மகேசுவரனை நமஸ்கரித்து அவருடைய அனுக்கிரஹத்தால் ஸ்படிகமயமான ஐந்துசந்திரமௌளீசுவர லிங்கங்களைப்பெற்று அவைகளைக் கிரமமாக அந்தந்த இடங்களில் பிரதிஷ்டைசெய்து உடனே தன் மாதாவுக்குச் செய்யவேண்டிய பரலோக கார்யங்களை முடித்தபிறகு ஆங்காங்கு விஜயம்செய்து ஸகல துர்மதங்களையும் சாஸ்திரீய்மான வாதத்தால் கண்டித்து எங்கும் அத்வைதமதத்தை எந்தப் பிரபுவானவர் நிலைநாட்டினாரோ பரமேஸ்வர அவதாரமான அம்மஹான் என்னை ரக்ஷிக்கட்டும். (4)

(தொடரும்)

வெ. ராதாகிருஷ்ணன்

---

# வார விருத்தாந்தம்.

இந்தியாவுக்கு இக்கதி வேண்டாம்:—26வ அமெரிக்கா கோர்ட்டில் ஓர் விசித்ரமான தீர்ப்புக்கூறப்பட்டது புருஷன் வாதி. மனைவி பிரதிவாதி. கர்ப்பத்தை ஏற்று குழந்தையைப் பெறாமல் கருவை அழிக்கிறாள். ஆதலின் இவள் விவாஹத்தை ரத்துசெய்யவேண்டுமென்பது வழக்கு. அவளுக்கு கர்ப்பத் தடை செய்ய உரிமையுண்டு. ரத்துசெய்யமாட்டோம் என

கோர்ட்டு தீர்ப்பு. பெண் சுதந்திரம் வேண்டும் விவாகம்போகத்திற்கென்றெண்ணம் இதன் பயனிது. இக்கதி நம்மவருக்கு வாராமலிருக்கவேண்டின் பழய ஆசாரத்தைக் கைப்பற்ற வேண்டும்.

* * * * * * * *

ஊருக்கிளைத்தது:—28உ ஸ்ரீயுத காந்தி "வக்கீல்களுக்குச் சாரதாசட்டத்திற்கடங்கி நடக்கும்படி ஜனங்களைத்தூண்டினாலும் போதும், கோர்ட்டுக்குப்போகாவிடினும் பாதகமில்லை" என்கிறார். சட்டசபையில் ஜனங்களுக்கு வரி தள்ளிக்கொடுக்கவேண்டுமென தீர்மானம் கொண்டுவந்தால் கேட்பாரில்லை. ஆதலால் வர்ணாச்ரம தர்மத்தை அழிக்கச் சட்டம்கொண்டுவருகின்றனர் அங்கத்தினர். வக்கீலை வேலைக்குப்போகாதே என்றால் கேட்பார்களா? மதத்தைக்கெடுக்கவாவது ஸஹாயம் புரியுங்கள் என அழைக்கிறார். மதத்தில் தலையிட்டால் மதிப்பை இழப்பீர் என அவருக்கு அறிவித்தல் நலம்.

* * * * * * * *

நிற்கவில்லை:—மதமாறுதல்செய்யும் பாதிரிகளுக்கு ஸ்வராஜ்ய இந்தியாவில் இடமில்லை என காந்தி கூறினதைக்கேட்டு பாதிரி உலகம் பதறுகிறதென முன் பகர்ந்தோம். 29உ ஆண்ட்ரூஸ் என்ற இவர் சிஷ்யர் ஸமாதானம் கூறும்போது அரசாங்க உதவிபெறும் ஆங்கில கலாசாலையில் இந்தியர்களைக் கட்டாயமாக பைபிள் ஓதும்படிசெய்து வந்தனர். தற்சமயமதில்லை என்கிறார். இவ்வழக்கம் அநேக இடங்களில் விசேஷமாக பெண் கலாசாலையிலும் இருந்துவருகிறது. பைபிள் பரீக்ஷையில் தோற்றவர் மற்றவைகளில் தேறினும் தோற்றவராக கருதப்படுகின்றனர். அவரைச் சொல்வதில் பயனென்ன? பெற்றோரன்றோ கவனிக்கவேண்டும்.

* * * * * * * *

ஸ்வஜாதி சிறந்ததே:—30உ ஓர் பத்ரிகா நிருபர் ஓர்செட்டியார்வகுப்பைச் செம்படவனெனக் கூறியதைக்கண்டித்து ஓர் செட்டியார் எழுத பத்திரிகை அதைப் பிரசுரித்து ரஹஸ்யமாக மன்னிப்பு கேட்கிறது. இப்பத்ரிகைகள் ஜாதியை அடியோடு ஒழிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கின்றன. நாகரீகமோ

ஹத்தால் சிலரிதை ஆதரிக்கலாம். நம்நாட்டுக் கல்விபயின்று மதாபிமானங்கொண்ட எண்ணிறந்த மக்கள் ஸ்வஸ்வ ஜாதியை சிறந்ததெனை நம்புகின்றனர். அதைப் புண்படுத்துவது அனியாயம். இதன் பலனை விரைவில் பத்ரிகை அனுபவிக்கும்.

* * * * * * * *

இந்தியாவின் தௌர்ப்பாக்யமா:—1௳ லண்டனிலிருந்து இந்தியாநிருபர் எழுதுகிறார். லார்ட்இர்வின் ஆடம்பரவரவேற்பைவிட்டு வந்தவுடன் கிருஸ்தவக்கோவிலுக்குப்போய் 3-மணி அவகாசம் தியானம் செய்தார். இந்தியர் செயற்கையால் வந்ததிது என்றெழுதி பலரின் அவமதிப்புக்காளாவர் என கண்ணீர் வடிக்கிறார். இந்தியாவின் துரதிருஷ்டம் அச்யமதாபிமானியைக்கூட இகழும் படிசெய்கிறதோ? மதாபிமானியை சித்ரகுப்தன் புகழ்வான் ஏனையோரை—?

* * * * * * * *

கோள் சொல்தல்;—1௳ டைம்ஸ் ஆப்இந்தியா என்ற வெள்ளையர் பத்ரிகை சூரத்தில் வெடிகுண்டால் ஓர் சிறுவன் காயப்பட்டான். அவன் பக்ரீத்தில் மஹம்மதியர்கள்மேல்போட வைத்திருந்த குண்டது எனகூறுகிறது. இருவகுப்பினரது பெரும் முயற்சியால் இவ்வாண்டு இதுவரை எங்கும் எவ்வித ஆபத்துமில்லாமல் ஷ்டி பண்டிகை முடிந்ததாக ஸந்தோஷப்படும்போது விஷமமாக இப்பத்ரிகை இப்படி மூடர்களைக் கிளப்பிவிட ஆரம்பிக்கிறது. இத்தீயகுணம் பொதுவாக சிலரிடமுமுண்டு. இது பெரும் பாபமாம். இதைக் களைவராக.

* * * * * * * *

நம்மைக்கொண்டே கண்ணைக்குத்தவா? 30௳ மலையாள கிருஸ்தவர் ஸபையில் திருவாங்கூரிலும் கொச்சியிலும் பள்ளிக்கூடங்களில் கிருஸ்தவமதத்தைக் கற்பிக்கக்கூடாதென்றிருக்கும் சட்டத்தை தொலைக்கவேண்டுமென்கின்றனர். அனேகமாக ஸ்கூல்களுக்கு வருஷவரியாக 'க்ராண்ட்' என்றவகையில் ஆசாங்கத்திலிருந்து பணம் வருகிறது. மாணவர்களிடமும் சம்பளம் வாங்குகின்றனர். நம் பணத்தைக்கொண்டே நம்மதத்தைத் தூஷித்து கிருஸ்துமதத்தைப் போதிப்பதற்கில்லையாம். அழுகின்றனர். ஸமஸ்தானத்தில் சிலதேனும் இவ்விவேகமுள்ள கார்யம்

செய்ததைக்கொண்டு ஸந்தோஷம். மதாபிமானமிருந்தாலல்லவோ சட்டசபை அங்கத்தவர் இம்முறையை இங்குமாதரிப்பர்?

* * * * * * * *

பெரும்பான்மையே ப்ரமாணமா? ஸ்வாமி ரதத்தின்மீது தேசியக்கொடி நாட்டி காந்திப் படத்தைவைப்பதென்ற தொத்து வழக்கம் தூத்துக்குடி, மதுரை, திண்டுக்கல் முதலிய விடங்களில் பரவிற்று. ஓர் தலைவர் பெரும்பான்மையோர் விரும்புகிறார், ஆதலின் தாம் தலையிடமுடியாதென்றார். தலையிட்டாலும் பயன் படாதென அதன்பொருள். அறிவுள்ளவன் நல்லது கெட்டதை யோசித்து ஆதரிக்கவேண்டும். பெரும்பான்மை என்பதற்காக ஒன்றை ஆதரிப்பதாயின் உலகில் கள்ளிமுள் நிறைந்திருக்கிறது. சந்தனம் குறைந்திருக்கிறது. பெரும்பான்மையை ஆதரிக்க லாமா?

* * * * * * * *

வழி ஸரியல்ல:—இது பத்ரிகை நூற்றுண்டு, உண்மைக்கு மாறான விஷயம் பலமுறை பத்திரிகையில் அடிபட்டால் அது உண்மையாகிவிடும். இதையே சாணமாகக்கொண்டோர் பத்ரிகை சொற்படி சுலபமாக ஒருவனை நல்லவரல்லது தீயார் என தீர்மானித்து விடுவர். ஆதலின் நிருபரோ பத்திராதிபரோ ஆயிரம்பேசு ஒன்றை எழுதாதே என்றபடி நன்கு யோசித்து உண்மையைத் தெளிவாக எழுதவேண்டும். மதுரை நிருபர் ஆயிரங்கால் மண்டபத்திலிருந்த விநாயகர் மாயமாக மறைந்ததென்று எழுதி உசலம்பட்டியில் அது பூஜிக்கப்படுவதாகவும் ஆங்கு விஜயம்செய்த ஸ்ரீ ஜகத்குரு காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஸ்வாமிகள் அந்தூரில் ஓர் விநாயகரைப் பூஜிக்கவேண்டுமென்றும் மீனாக்ஷி கோவிலில் அழகான விக்ரஹமிருப்பதாக ஒருவரிடம் சொன்னதாகவும் எழுதுகிறார். உண்மை அறியாதவர் என்ன நினைப்பர்?

ஸ்ரீவத்ஸ வே. சோமதேவ சர்மா.

---